Registered as a Newspaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் –24 | 06–04–2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை –048

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத கண்கவர் தங்க நகைகளை சுத்தமான 22 கரட் தங்கத்தில் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247

(சி-9294) 077-6059672

# ஜெனிவாவில் மாபெரும் பொங்குதமிழ் எழுச்சிப் பேரணி

## ஐரோ, வட அமெ. வாழ் தமிழர் பல்லாயிரம் பேர் திரண்டனர்

தமிழ்மக்களின் நிலைப்பாட்டை வலியுறுத்தி ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபைநோக்கி நேற்று பொங்குதமிழ் எழுச்சிப் பேரணி நடைபெற்றது.

ஐநா.நோக்கிய வீதிகளெங்கும் தமிழீழத் தேசியத் தலைவரின் படங்களையேந்தி தமிழீழத் தேசியக் கொடி பட்டொளிவீசிப்பறக்க உலகத் தமிழர்கள் பேரணி நடத்தியுள்ளனர்.சிறுவர்கள் முதல் முதியோர் வரை ஐரோப்பிய நாடுகளில்மட்டுமல்ல அமெரிக்கா,கனேடிய நாடுகளிலிருந்தும் தமிழர்கள் பங்கேற்றனர்.

எங்கள் தலைவர் பிரபாகரனே! எங்கள் காப்பரண் புலிப்படையே! எங்களுக்கு ஒரே தலைவர் பிரபாகரனே! தமிழீழ தாயகம் தான் எமக்கு ஒரே தாயகம்!! வடகிழக்கே எமது தாயகம்!! தமிழீழத்தாயகமே எங்களது தாகம்!! என்பது உள்ளிட்ட முழக்கங்கள் எழுப்பி இந்தப் பேரணி நடைபெற்றது. தமிழீழத்தின் பாரம்பரியகலை நிகழ்வுகள் இந்த பேரணியில் இடம் பெற்றது.

ஜெனிவா புகையிரத நிலையத்தில் இருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமாகி நான்கு மணிநேரத்திற்கும் மேலாக இப்பேரணி நகர்ந்து சென்றது. இதனால் ஜெனிவாநகரின் பலபகுதிகளில் வாகனப் போக்குவரத்துக்கள் தடைபட்டன. ஐ.நா.சபைக்கு முன்னுள்ள மைதானத்தில் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் இடம் போதாமையால் பலவீதிகள் முடப்பட்டு அங்கிருந்து மக்கள் பார்வையிட வசதி செய்யப்பட்டிருந்தது.

ஜேர்மனி, பிரான்ஸ்,இத்தாலி, டென்மார்க், நோர்வே, கொலன் மற்றும் தன்சானியா, தென்னாபிரிக்கா, மலேசியா,அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்றநாடுகளிலிருந்து இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டமக்கள் தமிழீழத் தேசியக் கொடியுடன் தாம் வாழும் நாடுகளின் கொடிகளையும் தாங்கிய இம்மக்கள் ஊர்வலமாகச் சென்றனர். 15000 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

இங்கு நடைபெற்ற கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன், மட்டு. அம்பாறை மாவட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)




# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளு. உறுப்பினர்கள்

# கொழும்பில் இன்று மாலை கூடுகின்றனர்!

## இத்தேர்தல் மூலம் விடுதலைப்புலிகள் பாராளு.அங்கீகாரத்தைப் பெற்றுள்ளனர்

### பி. பி. ஸி கொழும்புச் செய்தியாளர்

"பாராளுமன்றத்தில் மூன்றாவது பலம் வாய்ந்த கட்சியாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆகியுள்ளது. இதுவரை விடுதலைப்புலிகள் பெறாத பாராளுமன்ற அங்கீகாரத்தையும் விடுதலைப்புலிகளுக்கு இதுஅளித்துள்ளது". என கொழும்பிற்கான பி.பி.ஸி.நிருபர் பிரான்சிஸ் ஹரிசன் தெரிவித்துள்ளார்.இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கை (8ஆம் பக்கம் பார்க்க)

## லக்ஷ்மன் கதிர்காமருக்குப் பிரதமர் பதவி மகிந்த ராஜபக்ச எதிர்த்துப் போர்க்கொடி!

### – இரகசிய வாக்கெடுப்பு நடத்ததீர்மானம்

பிரதமர் தெரிவு தொடர்பிலும், பெரும்பான்மைப் பலம் தொடர்பிலும் ஆட்சியமைப்பதில் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சவால்களை எதிர்நோக்கியுள்ளது. பிரதமராக லக்ஷ்மன் கதிர்காமர் நியமிக்கப்பட லாம் என்றிருந்த நிலை நேற்றுக் காலையில் முற்றிலும் மாறியுள்ளது.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவினதும் அவரது ஆதரவாளர்களினதும் எதிர்ப்பை

(8ஆம் பக்கம் பார்க்க)

### வீரவணக்கம்

நேற்று முன்தினம் சுகயீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

கப்டன் செல்வமதி (குமார்வேல் உஷாந்தினி, அல்வாய் மேற்கு திக்கம், பருத்தித்துறை த.மு. மில்லர் குடியிருப்புதோவில் உடை

(8ஆம் பக்கம் பார்க்க)

## பாராளு. குழுத்தலைவர் தெரிவு செய்யப்படுவார்

**(கொழும்பு)**

**சிறிலங்காவின் 13வது பாராளுமன்றத்திற்குத் தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று மாலை, கொழும்பில் தமது பாராளுமன்றக் குழுத்தலைவரைத் தெரிவுசெய்வதோடு, தமது அடுத்தகட்ட நடவடிக்கை குறித்தும் ஆராய்வர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேச கிளிநொச்சிக்கு வருகைதருவர் எனவும் அறியவருகின்றது.**

சிறிலங்காவின் 13வது பாராளுமன்றத்திற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற 20 பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்றுமாலை கொழும்பில் கூடவுள்ளனர்.இக்கூட்டத்தில் வடக்கு-கிழக்கில் இருந்து தெரிவாகியுள்ள அனைத்துத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி சந்திரிகா அரசில் அங்கம் வகிக்க த. தே. கூட்டமைப்பினர் தயாராக இல்லை!

### - மட்டு-அம்பாறை நிலைகுறித்து சிவராம்

(கொழும்பு)

மட்டு-அம்பாறை மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்கள் தமிழ்த்தேசியக் கோட்பாட்டிற்கு முற்றும் முரணான கோட்பாடுகளைக்கொண்டுள்ள ஜே.வி.பி. போன்ற கட்சிகளை உள்ளடக்கிய சந்திரிகா அரசில் அங்கம் வகிக்க யாரும் தயாராக இருக்கவில்லையென பத்திரிகையாளரான டி.எம். சிவராம் பி.பி.ஸி.க்குவழங்கியசெவ்வியில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைக்கப்போகின்றது என்பது உறுதி ஆகிவிட்டது. ஆனால் அந்த ஆட்சியை எப்படி அமைக்கப்போகின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## உறுதியான கொள்கையை மனதிலேநிறுத்தி தேர்தலிலே பூரணபங்கெடுத்த மக்களுக்கு நன்றி

### கடற்புலிகள் தெரிவிப்பு

பல்வேறு துன்பங்களின் மத்தியிலும் கொட்டும் வெயிலிலும் தமது உறுதியான கொள்ளையை மனதிலே நிறுத்தி பூரணமாக தேர்தலிலே பங்கெடுத்துக் கொண்ட எம் அன்புக்குரிய அனைத்து முல்லை.மாவட்ட கரையோர மக்களுக்கும் எமது பகுதி மக்களை ஏற்றி இறக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட அனைத்து வாகன உரிமையாளருக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் எனக் கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

முழுமையான மக்களும் இத்தேர்தலில் கலந்து கொண்டமையின் நிமிர்த்தம் உள்ளூர் வாகனங்களையும் பயன்படுத்தி இருந்தோம்.இதற்கான கன்ரர்கள் சிறிய வாகனங்கள், பாரஊர்திகள் என்பன பயன்படுத்தி இருந்தோம் இதனால் மக்களுக்கு பல அசௌகரியங்களும் எற்பட்டதை எம்மால் உணரமுடிகின்றது. இதற்காக நாம் மனம் வருத்துகின்றோம்.

ஒட்டுமொத்தமாக நீண்ட தூரம் சென்று உணர்வோடு வாக்களிப்பதில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரன், மனோகணேசன் இன்று புலிகளுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் மற்றும் மேல் மாகாண மக்கள் முன்னணிப் பொதுச் செயலாளர் மனோ கணேசன் ஆகியோர் இன்று வன்னிக்கு வருகை தரவுள்ளனர். இவர்கள் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை சந்தித்து இன்றைய நிலை குறித்து ஆராயவுள்ளனர்.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்திலிருந்து பெ.சந்திரசேகரன் அவர்களும் கொழும்பு மாவட்டத்திலிருந்து மனோ கணேசன் அவர்களும், தெரிவு செய்யப்பட்ட பின் இன்று இவர்கள் புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

புலிகளைச் சந்தித்தபின்பே நாடு அரசியல் நிலை குறித்து முடிவெடுக்கப்போவதாக சந்திரசேகரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சுவிஸ் - ஜெனிவாவில் பொங்கு தமிழ்

















## வரிவிளம்பரம்

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம

ஜோண் கல்விநிலையம்

முல்லை வீதி புதுக்குடியிருப்பு 2006 ஆம் ஆண்டிற்கான A/L கலை வகுப்புக்களும், O/L மீட்டல வகுப்புக்களும் A/L விசேட ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. காலம்:- 05.04.2004 திங்கள் பி.ப.3.00 மணி. நிர்வாகி. (4063)

### வேந்தன் பல்கட்டும் நிலையம் கிளிநொச்சி

பல்கட்டுதல், மிதப்பு பற்களுக்கு கிளிப் போடுதல் என்பவற்றை சிறந்த முறையில் செய்துகொள்ள மத்திய கல்லூரி மைதானம் முன்பாக வேந்தன் பல்கட்டும் நிலையம், யாழ் கண்டி சாலை, ஆனந்தபுரம். (4359)

### விற்பனைக்கு உண்டு

தரமான தென்னை நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. பிரசன்னா வைத்தியநிலையம், 116/1, விசுவமடு. (4224)


# தேர்தலின் போது ஒத்துழைத்த அனைத்து அமைப்புகளுக்கும் நன்றி

## -கிளி.அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கடந்த வெள்ளிக்கிழமை அன்று கிளி.மாவட்ட வாக்காளர்களுக்கு எவ்வித சிரமமுமின்றி வாக்களிக்க உதவும் வகையில் சகல வழிகளிலும் திறம்பட ஒத்தாசை நல்கிய அனைத்து அரச திணைக்கள ஊழியர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் கிளி.மாவட்ட அரசஅதிபர் தி.இராசநாயகம் தனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

சகல கிராமங்களிலும் இருந்து வாக்காளர்களை வாக்களிப்பதற்கு ஏற்றவகையில் பிரயாணவசதிகளை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்திய தமிழீழ போக்குவரத்துக்கழகம், வடபிராந்திய பாரவூர்திசங்கத்தினர், சிற்றூர்தி, உந்துருளி, உழவியந்திர உரிமையாளர்கள், அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்துள்ளதுடன்

அத்துடன் பளை முகமாலைப் பகுதியில் பெருமளவு மக்கள் தங்கிநின்று வாக்களிக்கக் கூடிய வகையில் வாக்களிப்பு நிலையத் திற்கு முன் இருந்து வாக்களிக்கத் திரண்டிருந்த மக்களுக்கு குடிநீர், உணவு வசதிகள் வழங்கிய சகல அமைப்புக்கள் மற்றும் சுகாதார வசதிகளை மேற்கொண்ட கிளி. மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட மற்றும் பளை மருத்துவ மனையினர் வைத்தியர்கள், ஊழியர்கள், கிளி.மாவட்ட இலங்கைசெஞ்சிலுவைச் சங்கத்தினர் அனைவருக்கும்.

மற்றும் 55வீதத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களை வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பிவைப்பதிலும், ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டகிராமசேவை அலுவலர்கள், இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட உதவி அரச அதிபர்கள், செயலக பணியாளர்கள் கரைச்சி,பூநகரி, பச்சிலைப் பள்ளி பிரதேசசபையினர் (Zoa) நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார். (சோ)

# த.கூட்டமைப்பிற்கு ஆதரவாக செயற்பட்டவர் மீது ஈ.பி.டி.பி தாக்கு

யாழ்குடா நாட்டில் தமிழ்கூட்டமைப்பினருக்கு ஆதரவாக பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் மீது ஈ.பி.டி.பியினர் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். வறணி இடைக் குறிச்சிப் பகுதியில் தமிழ் கூட்டமைப்பு ஆதரவாளர் ஒருவரின் வீட்டிற்கு நேற்று முன்தினம் இரவு கையஸ்வான் ஒன்றில் சென்ற ஈ.பி.டி.பி குழுவினர் குடும்பத்தலைவர் மீது சரமாரியாக தாக்குதலை நடத்தியும் வாள்வெட்டியும் படுகாயப்படுத்தியுள்ளனர். இதே தினம் ஊர்காவற்றுறை கரைச்சிக் கொத்திக் குளத்தைச்சேர்ந்த கோபாலப்பிள்ளை என்பவரது வீட்டிற்கு அத்து மீறி பிரவேசித்த ஈ.பி.டி.பியினர் அங்கிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தி படுகாயப்படுத்தியிருக்கிறதுதெரிந்ததே(27)


## 31 ம் நாள் நினைவில்...



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1947 | 2004 |
| □ | □ |
| 07 | 03 |
| □ | □ |
| 02 | 07 |

அமரர்

### நாகமணி விக்னேஸ்வரன்

4ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு

"அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கிறோம்"

(சி-7178) குடும்பத்தினர்.

## வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தினரும், மல்ரிபிளெக்ஸ் கம்பனியும் இணைந்து நடாத்தும் விவசாய உள்ளீடுகள் பற்றிய கருத்தூட்டல் நிகழ்வுக்கான கால அட்டவணையில் 08.04.2004 ஆம் நாளிற்குரியது தவிர்க்க முடியாத காரணத்தினால் மாற்றம் செய்யப்பட்டதனை அறியத் தருகின்றோம்.

| நாள் | நேரம் | பிரதேசங்கள் | இடம் |
|---|---|---|---|
| 08-04-2004 | மு.ப. 8.00-10.00 | ஆண்டான்குளம், இலுப்பைக்கடவை, பெரியமடு | ஆண்டான்குளம் மகாவித்தியாலயம் |
| 08-04-2004 | மு.ப. 11.30-1.30 | முழங்காவில், பல்லவராயன்கட்டு | முழங்காவில் மகாவித்தியாலயம் |
| 08-04-2004 | பி.ப. 2.00-4.30 | பாண்டியன்குளம், துணுக்காய், வவுனிக்குளம். | யோகபுரம் மகாவித்தியாலயம் |
| 08-04-2004 | பி.ப. 6.00-8.00 | அக்கராயன், கோணாவில், ஸ்கந்தபுரம், வன்னேரி. | ஸ்கந்தபுரம் 1வது பாடசாலை |

(சி-9349)

# ஈராக்கில் அமெரிக்க கூட்டுப் படையினருடன் ஷியா முஸ்லிம் பிரிவினர் கடும் மோதல்!

## -30பேர் பலி; 200பேர் காயம்

**ஈராக்கின் பல பகுதிகளில் ஷியா முஸ்லிம்களுக்கும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினருக்கும் இடையில் நேற்று முன்தினம் முதல் மோதல்கள் வெடித்துள்ளன. இதில் சுமார் 30பேர் கொல்லப் பட்டுள்ளனர். இருநூறுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.**



*நஜாப்பில் நடைபெற்ற மோதலின் போது அமெரிக்க படை யினரின் வாகனம் எரிக்கப்படுவதையும் ஷியா இன தலைவர் மக்டடாவின் உருவப்படத்தை ஏந்தி நிற்கும் ஷியா இனத்தவரொருவர்.*

அமெரிக்கா தலைமையிலான படையினருக்கும் ஷியா முஸ்லிம் களுக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது மோதல் சம்பவம் இது வென்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் ஷியா பிரிவைச் சேர்ந்த தீவிரவாத இயக்கத்திற்குச் சொந்த மான பத்திரிகை அலுவலகம் ஒன்று அமெரிக்க நிர்வாகத்தினரால் கடந்த வாரம் மூடப்பட்டது மேலும் இந்த அமைப் பைச் சேர்ந்த முக்கிய தலைவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் நஜாப் நகரிற்கு அருகே ஸ்பெயின் தலைமையிலான இராணுவமையக் கட்டடத்திற்கு பெருமளவு ஷியா பிரிவு மக்கள் கற்களை வசித்தாக்கினர். இந் நிலையில் பதிலுக்கு ஸ்பெயின் தலைமையிலான இராணுவத் தினரும் தாக்குதலில் ஈடுபட்டபோது அதுபெரும் மோதலாக உருவெடுத்தது. இதில் 22 பொது மக்களும் இரு படையினரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது. நூற்றுக்கும் மேலானோர்காயம டைந்தனர்.

மேலும் சில பொலிஸ் நிலையங் களையும் அரச கட்டடங்களையும் ஷியா பிரிவினர் கைப்பற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதுவரை அமெரிக்கா உள்ளிட்ட கூட்டுப் படைகளுடன் சுனி முஸ்லிம் களே மோதல்களில் ஈடுபட்டு வந்த னர். சதாம் ஹுசைனின் ஆட்சி இடம் பெற்ற போது பெரும்பான்மை ஷியா க்கள் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருந்து வந்தனர். சதாமின் ஆதர வுடன் சுனி முஸ்லிம்களே ஆதிக்கம் செலுத்திவந்தனர்.

அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்த பின்னர் ஷியாக்கள் பரவலான அரசி யல் பொறுப்பை எதிர்பார்த்தனர். எனி னும் ஷியாக்களுக்கும் அமெரிக்கர்களுக் கும் இடையே ஏற்பட்டுள்ள இந்த மோதல் நிலைமையைத் தொடர்ந்து தற்போது அது ஆயுத மோதலாக மாற்ற மடைந்து ஈராக்கை பாரிய நெருக் கடிக்கு இட்டுச்சென்றுள்ள அதே வேளை அமெ ரிக்காவையும் அதிர்ச்சிக்குள் ளாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மேலதிக படையினரை அனுப்ப வலியுறுத்து!

ஈராக்கில் மேலதிகமாக அமெரிக்க படைவீரர்களை அனுப்ப வேண்டிய நிலை ஏற்படுமென செனட்சபையில் வெளிவிவகார உறவுகளின் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். நெருக் கடிகள் அதிகரித்துவரும் நிலையில் அவர் இக்கருத்தை வெளியிட் டுள்ளார்.



*பலஸ்தீனத்தின் காஸா முனையில் இஸ்ரேலியப் படையினர் நடத்திய சுற்றி வளைப்பின்போது கைதுசெய்யப்பட்டு முகாமுக்கு அழைத்துச் செல்லப்படும் பலஸ்தீனர்.*

# பாக்தாத்தில் அதிரடித் தாக்குதல் 7 அமெரிக்கப் படையினர் பலி!

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீவிரவாதிகள் அதிரடித்தாக்குதலில் 07 அமெரிக்கப்படையினர் உயிரிழந் துள்ளார்கள்.

சுனி முஸ்லிம் தீவிரவாதிகள் இத்தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்படுகிறது. இதேவேளை ஹிர்குக் நகரில் தற்கொலை குண்டுத்தாக்குத லுக்கு இலக்காகி 2 அமெரிக்கரும்,5 ஈராக் கியரும் காயமடைந்துள்ளதா கவும் அறிவித்துள்ளது.

# அமெரிக்க நட்புறவு நாடுகளின் பிரஜைகள் மீதும் பாதுகாப்பு கெடுபிடி

## பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கும் நடவடிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் நெருங்கிய நட்புறவு நாடுகள் இருபத்தொன்று உள்ளிட்ட பல நாடுகளின் பிரஜைகள் வேதனைக்கு ஆளாகும் திட்டத்தை எதிர்நோக்கவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகும் திட்டத்திற்கு அமைய சகல விமான நிலையங்களிலும் துறைமுகங்களிலும் இந்த பிரஜைகளின் புகைப்படம் பிடிக்கப்பட்டு விரல் அடையாளங்கள் பதிவு செய்யப் படவுள்ளது.

குறித்த நாடுகளில் யப்பான், அவுஸ் திரேலியா, பிரிட்டன் ஆகியனவும் அடங்குகின்றன. 2001 செப்டெம்பர் 11 இல் மேற்கொள்ளப்பட்ட தாக் குதல்களைப் போன்ற மோசமான தாக்குதல்கள் போன்ற அசம்பா விதங்களைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் அரசு அறிவித்துள்ளது

# இந்தோனேசிய பொதுத்தேர்தல் 15 கோடி மக்கள் வாக்களிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் பாராளுமன் றத் தேர்தல் நேற்று நடைபெற்றது.15 கோடி மக்கீள் வாக்களித்துள்ளனர். இவர்கள் 550 பாராளுமன்ற அங்கத்த வர்களையும் உள்ளூராட்சி உறுப்பினர் களையும் தெரிவுசெய்யவுள்ளனர். 24 கட்சிகளைச் சேர்ந்த 7800 வேட்பா ளர்கள் பாராளுமன்ற ஆசனங்களுக்கு போட்டியிடுகின்றமை குறிப்பிடத் தக்கது.1998 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்தோனேசியாவில் இடம் பெறுகின்ற இரண்டாவது பாராளுமன் றத் தேர்தல் பெறுபேறுகள் நாளை வெளியாகும் என தேர்தல் அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.

# உலக வர்த்தக மையத் தாக்குதல்; நவம்பருக்கு முன் விசாரணை அறிக்கை

## -பரிந்துரைகளும் உள்ளடக்கம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகர உலக வர்த்தக மையக் கட்டடம் தகர்ப்புத் தொடர்பான விசாரணையின் இறுதி அறிக்கை அமெரிக்க சனா திபதி தேர்தலுக்கு முன்பாகவே வெளி யிடப்படும் என்று விசாரணை ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி நியூயோர்க் வர்த்தக மையக்கட்டடம் தீவிரவாதிகளால் விமானங்களால் மோதி தாக்கப்பட் டமை தெரிந்ததே.

உலகையே அதிர்ச்சியடைய வைத்த இந்தச்சம்பவம் குறித்து நியூயோர்க் மாநில முன்னாள் ஆளு நர் தோமஸ் கிங் தலைமையில் விசாரணை நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் வாஷிங்டனில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய அவர், தமது ஆணை யத்தின் இறுதி அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள. அமெரிக்க சனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக வெளியிடப்பட வேண்டும் என்று கூறினார்.

தமது அறிக்கையில் விசாரணை யின் முடிவுகள் மட்டுமன்றி தடுப்பு நடவடிக்கைகளுக்கான பரிந்துரைக ளும் முக்கிய இடத்தைப் பெறும் என அவர் மேலும் கூறினார்.

# மாவோயிஸ்ட்டுக்கள் தாக்குதல் 9 பொலிசார் பலி; 26 பேர் காயம்

நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதலில் 09 பொலிசார் உயிரி ழந்துள்ளதுடன் 26இற்கு அதிகமான பொலிசார் காணாமல் போயுள்ளனர்.

இத்தாக்குதல் சுமார் மூன்று மணித் தியாலங்கள் வரை நீடித்துள்ளது இதனால் மின்சாரம் தொலைபேசி ஆகியவற்றின் தொடர்புகள் துண் டிக்கப்பட்டுள்ளதுடன் பாதைகளிலும் வீதித்தடைகள் இடப்பட்டிருந் ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

# இந்திய-பாகிஸ்தான் பிரச்சினைகளுக்கு நேர்மையான பேச்சுக்கள் மூலம் தீர்வு!

## பாகிஸ்தான் தரப்பில் தெரிவிப்பு

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமி டையே உள்ள அனைத்து பிரச்சினை களையும் தீர்க்க இரண்டு நாடுகளும் தீவிரமாகவும் உண்மையாகவும் பேச் சுவார்த்தை நடத்துமென பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

காஷ்மீர் பிரச்சினை உட்பட அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்ப தற்கு இந்தியாவுடனான பேச்சுவார்த் தையில் முன்னேற்றம் ஏற்படவேண்டு மென சிங்கப்பூரில் பி.பி.ஸி.க்கு அளித்தபேட்டியில் பாகிஸ்தான் வெளியுறவு செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் மாதம் வரை பேச்சு வார்த்தை நடத்துவதுசம்பந்தமான விடயத்தில் முன்னேற்றம் எதுவும் ஏற்படாதுவிட்டால், பேச்சுவார்த் தையிலிருந்து விலகிக்கொள்வது குறித்து முஷாரப் கூறுவதை அவர் நிராகரித்துள்ளார்.

இதேவேளை இந்தியாவுடன் அமைதி நடவடிக்கைகளை மேற் கொள்ள பாகிஸ்தான் உறுதிபூண் டுள்ளதென அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

# தன்னைப் பற்றி சிந்தித்து ஜெயலலிதா கருத்துக்கூற வேண்டும்

## -தி.மு.க.தலைவர் சாடல்

(சென்னை)

இந்தியாவில் பூர்வீக குடியாக வாழ்ந்தவர்களே இந்தியாவை ஆட்சி செய்ய வேண்டுமெனக் கூறியுள்ள ஜெயலலிதா, தமிழ் நாட்டை தமிழன் தான் ஆட்சிசெய்ய வேண்டும் என்ற கவிஞர் பாரதிதாசனின் பாடலை நினைத்துப் பார்க்கவேண்டுமென திமுக தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். சிவகங்கை மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்ற வேட்பாளர் நேற்றுமுன்தினம் கருணாநிதியை, அவரது இல்லத்தில் சந்தித்தவேளை செய்தியாளர்கள் அவரிடம் அந்நிய நாட்டவர் ஒருவர் இந்தியா வில் பிரதமராகப்பதவியேற்பதற்கு தகுதியற்றவர் என கூறப்படுகின்ற கருத்துப் பற்றி கேட்டவேளையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



*நேற்று முன்தினம் இந்தோனேசியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது தேர்தல் பணிப்பாளர் இருவர் வாக்குச்சீட்டை பிடித்துக் காட்டுகின்றனர்.*

# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

## முரளியை குறிவைக்கும் அவுஸ்திரேலியா



சிறிலங்காவின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதனை கிரிக்கெட் உலகில் இருந்து ஓரம் கட்டுவதற்கு எடுத்துவரும் முயற்சி இன்று கிரிக்கெட் உலகில் பல தரப்பட்டவர்க ளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

1995 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பயணத்தின் போது அங்கு வைத்து முரளிதரனின் பந்து வீச்சு தொடர்பாக எடுக்கப்பட்ட சர்ச்சை அவரை சில காலம் கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கியிருக்க செய்தது பின்னர் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்( Icc) தீவிரமாக ஆராய்ந்து பந்து வீச்சில் தவறு இல்லை என அறிவித்தது.

தொடர்ந்து போட்டிகளில் கலந்து கொண்ட முரளி தனக்கென புதிய சாதனைப் பக்கங்களை திறந்துள்ளதுடன் அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களை கைப்பெற்றியுள்ள மேற்கிந்திய வீரன் கொட்னி வோல்ஷின் 519 என்ற விக்கெட் இலக்கை அண்மித்துள்ளார்.

இந்நிலையில் மீண்டும் அவர் மீது எழுந்துள்ள சர்ச்சை அவரைப்பெரிதும் பாதித்துள்ளதுடன் அவர் தொடர்பான உணர்வலைகள் கிரிக்கெட் மைதானத்தையும் தாண்டி எதிரொலிக்கத் தொடங்கியுள்ளன.

இது இவ்வாறிருக்க முரளி தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை அவுஸ்திரேலியாவில் மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை வெளியாகாத நிலையில் சிறிலங்காஅணி சிம்பாவ்வேக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. இதன்போது முரளி விளையாடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவர் கொட்னி வோல்ஷின் சாதனையை முறியடிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனை முறியடிக்கும் விதத்தில் தீர்ப்பு அமைந்துவிடுமோ என்பது ஒருபுறமிருக்க அந்த சாதனையைத் தடுத்து சிறிலங்காவில் வோல்ஷின் சாதனையை முறியடிப்பதை தவறவிட்ட ஷேன் வோர்னை இச்சாதனையை முதலில் எட்டுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சியா இது என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது ஒருபுறம் இருக்க எதிரணி வீரர்கள் அஞ்சி நடுங்கும் பந்து வீச்சாளர்களில் ஒருவராக வலம்வரும் முரளிதரன் மீதான அவுஸ்திரேலியர்களின் மேற்படிக்குற்றச்சாட்டு அவரை அவமானப்படுத்தும் வகையில் அமைந்துள்ள அதேவேளை இன்னும் ஆறு வாரங்களில் வெளியிடப்பட இருக்கும் அவரின் பந்துவீச்சுத் தொடர்பான இறுதி முடிவே முரளிதரனின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகின்றது.

## கால்பந்து கடினமான போட்டி மனந்திறக்கிறார் பெக்காம்

இங்கிலாந்தின் கால்பந்தாட்ட அணித்தலைவர் டேவிட் பெக்காம் தான் மஞ்செஸ்டரிலிருந்து ரியல் மட்றிட்டுக்கு வந்தமை பெரும் பாக்கியம் என்று கூறியுள்ளார். அவருக்கு அங்கு களத்தின் மத்தியில் விளையாட இடம் வழங்கியமை தனது திறமையை வெளிக்காட்ட சரியான வாய்ப்பு எனவும் ஆட்டங்களில் தமக்கு மதிப்பான இடம் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தான் அங்கு வந்துள்ளமை வியாபார நோக்கத்துக்கல்ல என்பதை நிரூபித்துள்ளதாகக் கூறும் அவர், சிலர் தான் ரியல் மட்றிட்டுக்கு வந்ததை வெறுப்பதாகவும் டீ சேர்ட் விற்பனைக்கு வந்ததாகவும் கருதுகின்றனர் என தெரிவித்துள்ளார்.

தான் மட்றிட்டுக்கு வந்தது விளையாடும் நோக்கத்துடனேயே இதில் தான் வெற்றி பெற்றால் இங்கு வந்த நோக்கம் நிறைவேறிவிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

கால்பந்தாட்டத்தைப் பொறுத்தவரை அது ஒரு கடின விளையாட்டு எனக் கூறிய பெக்காம் தான் சந்தித்த எதிர் அணிகளும் திறமையானவையே எனவும் கூறியுள்ளார். அத்துடன் சினிடைன் சிடேன், பிகோ, றொனால்டோ, றொபர்டோ கார்லோஸ், ராகுல் கொன்சாலஸ் ஆகியோருடன் இணைந்து ஆடும் வாய்ப்பு உன்னதமானது எனவும் அதனைத் தடுக்க முடியாது என்றும் அவர் தெரிவிக்கின்றார்.




அத்துடன் ஒரே அணியில் விளையாடும்போது நல்ல வீர்களோடு ஆடும் அனுபவம் கிடைப்பதாகவும் அவ்வாறான வீரர்களோடு இணைந்து ஆடுவது அவரின் விருப்பம் எனவும் தெரிவித்துள்ளார்.

**டெஸ்ட் போட்டிகளில் அணித்தலைமை ஏற்ற இளம் வயது வீரர்களின் வரிசை. இதில் ஆகக் குறைந்த வயதைக் கொண்டவர் தைபு ஆகும்.**

| வயது | வீரர் | எதிரணி | ஆண்டு |
|---|---|---|---|
| 20வயது 357நாள் | தைபு(சிம்பாவ்வே) | சிறிலங்கா | 2004 |
| 21வயது 77நாள் | பட்டோடி(இந்தியா) | மே.இந்திய தீவு | 1961 |
| 21வயது 194நாள் | இயன்கேரிக்(அவுஸ்) | தெ.ஆபிரிக்கா | 1957-58 |
| 22வயது 15நாள் | வக்கார்யூனிஸ்(பாக்) | சிம்பாவ்வே | 1993-94 |
| 22வயது 84நாள் | கிரகம் ஸ்மித்(தெ.ஆ) | பங்களாதேஷ் | 2003 |
| 22வயது 260நாள் | ஜாவிட்மியண்டாட்(பாக்) | ஆஸி | 1979-80 |
| 22வயது 306நாள் | முர்ரே பஸ்ஸட்(தெ.ஆ) | இங்கிலாந்து | 1898-99 |

## தமிழ்நாட்டின் தங்கமங்கை

தமிழகத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனை அஞ்சு ஜார்ஜ் எப்படியும்



ஒலிம்பிக் தங்கம் பெறு வேன் என்பதில் உறுதியாக இருக் கின்றார். இப்போது ரோஹினி ராவ் என்ற சென்னை பள்ளி மாணவியும் ஒலிம்பிக் தங்கம் பெறுவேன் என்று சூளுரைத்திருக்கின்றார்

பன்னிரெண்டாம் வகுப்பு மாணவியான ரோஹினிராவ் மும்பையில் நடந்த ஆசியப் படகுப்போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்திருக்கிறார்.

420 என்ற ஒருவகை படகுப் போட்டியில் ஆசிய சாம்பியனாகி அசத்தியிருக்கிறார். இந்த இளம்பெண் ரோஹினியும் கோவாவைச் சேர்ந்த பல்லவி நாயக்கும் இந்தப் போட்டியில் முதலிடத்தைப் பிடித்து தங்கப் பதக்கத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

படகோட்டுவதில் மட்டுமல்லாது ரோஹினி பல துறைகளிலும் கில்லாடியாக இருக்கின்றார். இது தமிழ் நாட்டுப்பெண்களுக்கு பெருமையே

## இளம்புயல் தைபு

சிம்பாவ்வே கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளரும் பிரதித் தலைவருமான 20 வயது இளம் வீரர் தைபு அணியின் புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.



தனது 12 ஆவது வயதில் தந்தையையும் 17ஆவது வயதில் தாயையும் இழந்த இவர் வாழ்வில் எவ்வித விரக்தியும் அடையாமல் நாட்டின் விளையாட்டுத் துறைக்கு பல அரிய பங்களிப்பைச் செய்து வருகின்றார். அவர் கிரிக்கெட்டில் சிறந்த விக்கெட் காப்பாளராக வேகமாக வளர்ச்சி பெற்றவர். தனது பாடசாலை வாழ்வில் பாடசாலை மேசைப பந்து அணித்தலை வராகவும் றக்பி வீரராகவும் திகழ்ந்தார். எனினும் கிரிக்கெட்டில் அவருக்கு மேலோங்கி இருந்த ஆர்வம் காரணமாக தேசியகிரிக்கெட் அணியில் இணைந்து விக்கெட் காப்பாளராக பணியாற்றுகிறார்.

ஆரம்ப முதலே அவருக்கு பிடித்தமான துடுப்பாட்டவீரர்களாக விவியன் ரிச்சட்டையும், சச்சின் டெண்டுல்கரையும் குறிப்பிடுகின்றார்.

மிகக்கடுமையான விக்கெட் காப்பாளர் பணியைச் செய்வதுடன் துடுப்பாட்டத்திலும் அவர் சிறந்து விளங்குகிறார். அண்மையில் அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற அணிகளுடன் V.B அவுஸ்திரேலிய மண்ணில் கிண்ணத்துக்கான முக்கோணப்போட்டியில் அவரது திறமை நன்கு வெளிக்கொணரப்பட்டுள்ளது.

சிம்பாவ்வே நாட்டில் கிரிக்கெட்அதிக பிரபல்யமடையாமல் இருப்பினும் தைபு கிரிக்கெட்டில் அதிக ஆர்வம் காட்டுவதாகவும் முன்னாள் அணித்தலைவர் கிராண்ட் பிளவரின் வழியில் நிற்க விரும்பியதாகவும் சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளதுடன், அதனால் கிரிக்கெட் சபையும் ரசிகர்களும் தன்னைப் பெரிதும் நம்பியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும் எனக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணியினரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டாமை துரதிர்ஷ்டம். எனக் கூறியுள்ளார்.

முன்னர் சிம்பாவ்வே கிரிக்கெட் அணித்தலைவராக இருந்த ஹீத் ஸ்ரீக் கிரிக்கெட் நிர்வாகத்துடன் ஏற்பட்ட சர்ச்சையால் அணித்தலைவர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார். இதனால் தைபுவுக்கு அணித் தலைமையை பொறுப் பேற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. முன்னாள் தலைவர் ஹீத் ஸ்ரீக் பல கோரிக்கைகளை முன்வைத்து அவை நிராகரிக்கப்பட்டால் தலைமைப் பொறுப்பிலிருந்து நீங்குவதாக எச்சரித்திருந்தார். தற்போது கறுப்பினத்தவரான தைபு அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் சிறிலங்கா அணியை எதிர்கொள்கின்றார். இதில் சிம்பாவ்வே அணி வெற்றி பெறுமாயின் தைபுவின் எதிர்காலம் மேலும் மேன்மை பெறும் என்பதில் ஐயமில்லை.

வடிவேல்

# உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த ஓமந்தை வாக்குச்சாவடி நோக்கி.....

படங்கள் ஆக்கங்கள்
அ.லோகீசன்

கடந்த 2ம் திகதி -தேர்தல் தினம். சுமார் 27 வருடங்களின் பின் தமிழ் மக்கள் மீண்டும் தேசியம், தாயகம் தன்னாட்சி எனும் தமது போராட்ட இலட்சியத்தை உலகிற்கு வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தை வெளிப் படுத்த இருந்ததினம்.

அதிலும் வன்னிவாழ் மக்கள் தமக்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தக் கூட பெரும் பிரயத்தை மேற்கொள்ளவேண்டியிருந்தது மற்றெல்லாப் பகுதியிலுமுள்ள மக்கள் ஒரு சிலகிலோமீற்றர் தூரம் மட்டுமே சென்று தமது வாக்குரிமையைச் செலுத்த, இம் மக்கள் பலபத்துக் கிலோ மீற்றர்கள் பயணித்து தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவேண்டியிருந்தது.

இந்தத் தேர்தலில் வாக்களிக்க சிங்களப் படையினரின் தடைமுகாமைக் கடந்து செல்ல



வேண்டிய நிலையிலிருந்தது பல்வேறு பட்ட தடைகள் ஏற்படுமோஎன்று அஞ்சும் நிலையிருந்தது.

இந்நிலையில் இரண்டாம் திகதி நாங்கள் ஓமந்தையில் அமைக்கப்பட்ட கொத்தணி வாக்களிப்பு நிலையத்தில் நடைபெறும் முல்லை மாவட்ட மற்றும் வவுனியா வடக்கு வாக்காளர்களின் வாக்களிப்பு பற்றிய செய்திகளை பத்திரிகை வாசகர்களுக்கு வழங்குவதற்காக எமது பயணத்தை அதிகாலை 4.30 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து ஆரம்பித்தோம்.

பொழுது புலராத அவ் அதிகாலை வேளையிலும் வாக்களிக்கச் செல்வதற்காக பெண்கள், முதியவர்கள் என்ற வேறுபாடு இல்லாது மக்கள்



84 வயது நிரம்பிய பொன்னையா செல்வமணி

கூட்டம் வீதிகளில் குவிந்திருந்தது வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக தயாராகி பேருந்துகளில் ஏறிதமக்கென ஒதுக்கப்பட்ட நிலையத்துக்கு செல்வதற்கு தயாராகி நின்றனர். நாம் தொடர்ந்து பயணித்துக்கொண்டே இருந்தோம்.

நேரம் 5.30 மணியிருக்கும் வாக்களிப்பதற்காக தயாராகி நின்ற மக்களைச் சுமந்தவாறு பேருந்துக்கள் உறுமிக் கொண்டு எம்மைத் துரத்தி வந்தன ஒன்று, இரண்டு,மூன்று, நான்கு... எண்ண முடியவில்லை அந்தப் போட்டியில் பேருந்துக்கள் எம்மை வென்றன.

நாங்கள் மாங்குளத்தை தாண்டிவிட்டோம் வாகனங்களின் தொகை வீதியில் வெகுவாக அதிகரித்தது. மக்கள் பேருந்துகளில் மட்டுமல்ல பாரஊர்திகளிலும், உழவியந்திரங்களிலும், சிற்றூர்திகளிலுமாக புளியங்குளம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு எம்மைத் தாண்டிச் செல்லும் மக்கள் பற்றியும் அவர்கள் இதுவரை காலமும் கடந்துவந்த கொடுமை நிறைந்த சோக வரலாறுகளைப் பற்றியும் பேசிக் கொண்டு சென்றோம். 1998ம் ஆண்டு காலப்பகுதியில் சந்திரிகா ஆட்சியில் 'ஜெயசிக்குறு' படை நடவடிக்கையால் மக்கள் விரட்டப்பட்டு, அழிக்கப்பட்ட அவர்களின் வீடுகள் சிதைவுகளை ஏந்தியவாறு இப்போதும் இருந்தன 'ஜெயசிக்குறு'இவ் வீதியை ஆக்கிரமிக்க முயன்றதும் அதனை எமது மாவீரர்கள் தமது உயிர்கொடுத்து மீட்டதும் எங்கள் மனங்களில் வந்தது.

'ஜெயசிக்குறு' படைகளுக்குப் பாடம் கற்பித்த புளியங்குளத்தைச் சென்றடைந்த போது பொதுமக்களைச் சுமந்து வந்த மஞ்சள், வெள்ளை என பல வர்ணங்களையுடைய பெருமளவு ஊர்திகள் தரித்து நிறுத்தப்பட்டிருப்பது சிறி தாகத் தெரிந்தது. அதன் பின்னர் சற்று நேரத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக நிற்பதும் எமக்குத் தெரிந்தது.

ஒருவாறு நாம் அந்த மக்கள் வெள்ளமாக குவிந்திருக்கும் பகுதியை 6.25மணியளவில் சென்றடைந்தோம். நாம் பயணித்த மோட்டார் சைக்கிளைவீதியோரமாக நிறுத்திவிட்டு புளியங்குளம் பேருந்து நிலையத்திலும் அதன் எதிரேயுள்ள பொதி சோதனையிடும் நிலையத்திலுமாக குவிந்திருந்த மக்களைப் பார்வையிட்டு காட்சிகளைப் புகைப்படமாக்குவதற்காக சென்றுகொண்டிருந்தோம்.

அங்கே வாக்களிப்பதறகாக கூடியிருந்தவர்களின் கைகளில் ஈழநாதம் பத்திரிகைகள். அவர்கள் குவியலாக குவிந்து நின்று அதனைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

அப்போது புளியங்குளம் பகுதிக்கு எமது பத்திரிகை விற்பனையாளராக நியமிக்கப்பட்டிருந்த 'பேப்பர் ஐயா' எம்மருகில் வந்து "தம்பி பேப்பர் முடிஞ்சுது என்ன செய்வது கொண்டு வருகிறார்களா? என்று கேட்டார். பத்திரிகையை அங்கிருந்து எடுத்து வருபவரை வழியில் நாம் எங்கும் காணாவிட்டாலும் அதற்கான ஏற்பாடு பற்றி அறிந்திருந்தோம். அதனை அவருக்குக் கூறிவிட்டு "எப்படியும் வந்துவிடும்" எனக் கூறிக் கொண்டிருக்க பத்திரிகையும் வந்து சேர்ந்தது.

அப்பகுதியில் திரண்டிருந்த மக்கள் வாக்களிப்பை மேற் கொள்வதற்காக முதல்நாள் பகலே வந்து தங்கியிருந்தவர்கள். அவர்களில் பலர் தமது உள்ளக் கிடக்கையை வெளிபடுத்த வாக்களிப்புக்கு ஓமந்தைக்குச் செல்லத் தயாராகி நின்றனர்.



பலர் குடும்பமாகவே வந்திருந்தார்கள். தாய், தந்தை, பிள்ளைகள் என அனைவருமே வந்திருந்தார்கள். சிலர் தமது கைக்குழந்தைகளுக்கு குளிர்படாமலும், மூடி வைத்திருந்தனர். வயது முதிர்ந்து நடக்க முடியாத முதியவர்கள் ஆங்காங்கே கூடியிருந்து அரசியல் பேசிக்கொண்டிருந்தனர். இந்த மக்களை புகைப்படம் எடுத்துவிட்டு வெளியே வந்தபோது வாசலில் மக்கள் குவிந்திருந்தனர். இவ்வாறு குவிந்திருந்தவர்களை வாக்களிப்பதற்காக வாக்குச் சாவடிகளுக்கு பேருந் துகள் ஏற்றிச் சென்று கொண்டிருந்தன. அதனைவிட கால்நடையாகவும் சென்று கொண்டிருந்தனர்.

வாக்களிக்கச்செல்லவெனப் பேருந்தில் ஏறிக்கொண்டிருந்த முதியவரைப் பார்த்து "எதுக்கு ஐயா வாக்களிக்கப் போகிறீர்கள்?" என்று ஒரு கேள்வியைப் போட்டோம். "வேறெதுக்கு? வீட்டுக்குத்தான்" என்று உற் சாகமாகக் கூறிவிட்டு பேருந்தில் விரைந்து ஏறிக்கொண்டிருந்தார்.

இந்தப் பகுதியைத் தாண்டி நாம் விடுதலைப் புலிகளின் முன்னணி தடைமுகாமை நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். வாகனங்களின் நெரிசல் நீண்டதூரம் வரை தொடராக இருந்தது. ஒருவாறு அவற்றைத் தாண்டி முன்னணித் தடைமுகாமிற்குச் சென்றோம் முன்னணி சோதனைச் சாவடியில் முன்ன ரைவிட அதிகளவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். எங்கும் மக்கள் வெள்ளம். தமிழீழக் காவல்துறையினர் மக்களை ஒருவாறு ஒழுங்குபடுத்திக் கொண்டி ருந்தனர்.

நேரம் காலை 7.15மணி. வாக்களிப்பதற்காக சென்ற முதலாவது தொகுதி மக்கள் தமது வாக்குகளைச் செலுத்திவிட்டு மீண்டும் திரும்பிக்கொண்டிருந்தனர். இவ்வாறு திரும்பியவர்களை இங்கே வாக்களிப்பதற்காக காத்திருக்கின்ற மக்கள் எப்படி ஏதும்பிரச்சினையா...? எத்தனை மணிக்கு போட விட்டார்கள்? ஆமியும் நிற்கிறானா? அல்லது பொலிஸ்தானா?ஏதும் சோதனை செய்யுறாங்களா? என்று கேள்வி மேல் கேள்விகளைத் தொடுத்துக்கொண்டிருந்தனர். இத்தனை கேள்விகளுக்கும் பதிலாக ஒரு பிரச்சினை யும் இல்லை. எல்லாம் பொலிஸ்தான் ஒரு சோதனையும் இல்லை காலமை 6.30 மணிக்கே 'வோட்'போடவிட்டுட்டார்கள். என்று பதில்கூறியவாறு போய்க் கொண்டிருந்தனர். இந்த பேருந்தில் இருந்தவர்களை பார்த்து எதுக்குப் போட்டனியள் என்று கூடியிருந்த மக்கள் கேட்டக முதலாவதே வீடு தான் அதுக்கு பக்கத்தில புள்ளியைப் போடுங்கோ என்று கூறிக்கொண்டு போய்க் கொண்டிருந்தனர். நாங்கள் அந்த மக்கள்



வெள்ளத்துக்கூடாக நீந்தி ஒருவாறு முன்பகுதியை அடைந்தோம் அதற்கப்பால் சூனியப்பிரதேசம். ஆகையால் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் அப்பகுதியூடாக பயணத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தனர்.

அவ்விடத்தில் நின்று பரீக்கும் போது ஓமந்தைக்குச் செல்லவென சென்ற பேருந்துகள் வரிசையில் நின்று மெது மெதுவாக நகர்வது தெரிந்தது. மக்கள் பேருந்துகளில் மட்டுமே வாக்களிக்கச் செல்ல அனுமதிக்கப்பட்டமையால் நடந்து செல்பவர்கள் எவரையும் காணவில்லை.

ஓமந்தை படையினரின் சோதனைச்சாவடியூடாக வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லும் முயற்சியில் ஈடுபடுவது எனத் தீர்மானித்தோம். சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதியிடம் அனுமதிபெற்று புலிகளின் முன்னணி சோதனை நிலையத்தில் இருந்து சூனியப்பிரதேசத்தை கால்நடையாகக் கடந்து இராணுவ சோதனை நிலையத்துக்குச் சென்றோம். அங்கே ஐந்து பேருந்துகள் உள்ளே நுழைவதற்காக தயாராக நின்றன. சோதனை நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் நாம் பத்திரிகையாளர்கள் என்றும் வாக்குச்சாவடி நிலவரம் பற்றி அறிவதற்காக வந்திருக்கின்றோம் உள்ளே போகவேண்டும் என்று கூறினோம். அந்த பொலிஸ் உத்தியோகத்தர் தமக்கு வாக்களிக்க பேருந்துகளில் செல்வோரைத்தவிர வேறு எவருக்கும் அனுமதி தரப்படவில்லை என்றும் மாவட்ட அரச அதிபருடன் தொடர்பு கொண்டு அவரின் அனுமதியுடன் வருமாறும் கூறினார்.

பின்னர் நாம் மீண்டும் திரும்பி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம் அப்போது சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரி எம்மிடம் "ஏன் திரும்புகின்றீர்கள்" என்று ஆங்கிலத்தில் கேட்டார்- "நாம் பத்திரிகையாளர்கள் உள்ளே செல்ல வேண்டும்" என்று கூறினோம். எம்மை நிற்குமாறும் தான் பொலிசாரிடம் கேட்டு முடிவு கூறுவதாகக் கூறினார். பின்னர் அது பலன் தராது போக நாம் மீண்டும் திரும்பி வந்தோம் அப்போது நோயாளர் காவு வண்டி ஒன்று அபாய ஒலி எழுப்பியவாறு வேகமாக எம்மைத்தாண்டி விளக்குவைத்தகுளம் நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. அப்போது எம் எதிர்த் திசையில் வருபவர்களிடம் ஏதும் விபத்து நடைபெற்றதா எனக் கேட்டபோது ஒரு மினிபஸ பாலத்தில் தடம்புரண்டு விட்டதாகவும்; பலர் காயமடைந்துவிட்டதாகவும் கூறினார்கள். உடனே நாம் அது பற்றிய செய்தியைப் பெறுவதற்காக சம்பவ இடத்திற்கு வந்தோம். அப்போது ஒருசிற்றூர்தி பாலத்தினுள் தடம் புரண்டு மிகவும் மோசமாக சேதமடைந்திருந்தது. அது அனந்த புளியங்குளத்தில் இருந்து வாக்களிப்பதற்காக மக்களை ஏற்றி வந்தது என்றும் 40பேர்வரை காயமடைந்தனர் என்றும் 09பேர் படுமகாயமடைந்தனர் என்றும் தெரிவித்தனர். நேரம் கடந்துகொண்டிருந்தது. அவ்வேளையில் அங்குநின்ற பல்லாயிரக்கணக்கான மக்களை ஏற்றிச்செல்ல அங்கிருந்த பேருந்துகள் போதுமா? 3.30 மணிக்கு வாக்களிப்பு நேரம் முடிந்துவிடும். அதற்குள் போய்விட முடியுமா? வாக்களிக்க முடியாது போய்விடுமோ? என்றெல்லாம் மக்கள் கூடி நின்றுபரபரப்பாகப் பேசிக்கொண்டுநின்றனர்.

அத்துடன் பேருந்துகளில் இடம்பிடிக்க முண்டியடித்துக்கொண்டும் இருந்தனர். "நடந்து போகவிட்டால் போய்விடுவோம்" என்று கூறிக் கொண்டு மக்கள் எவ்வாறாயினும் வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லும் முயற்சியில் பரபரப்பாக முயன்றுகொண்டிருந்தனர். அவ்வேளை முல்லை அரச அதிபரின் வாகனம் ஓமந்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. சுமார் 8.35 மணியிருக்கும் மக்கள் பொலிஸ் சோதனை நிலையத்தையும் தாண்டிக்கால்நடையாகவே ஓமந்தை நோக்கி நகரத் தொடங்கினர். ஆறு கிலோமீற்றர் தூரம் அதெல்லாம் அவர்களும் பொருட்டாகவில்லை. முதியோர், இளையவர்கள், ஆண்கள், பெண்கள், அங்கவீனர்கள் என்ற வேறுபாடின்றி ஒருமக்கள் வெள்ளம் ஓமந்தை நோக்கி பாய ஆரம்பித்தது.

(06 ஆம் பக்கம்பார்க்க)

# கருணா குழுவின் அடாவடித்தனங்களை எதிர்த்து மட்டக்களப்பில் பாரியளவில் வெகுசனப் போராட்டம்

## கல்விச் சமூகத்தினர் ஏற்பாடு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வட பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்கள் கருணா குழுவினரால் வெளியேற்றப்பட்டதை கண்டித்து மட்டக்களப்பில் வெகுசனப் போராட்டங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.**

கடந்த 29ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கருணா குழுவினரால் வர்த்தகர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருந்தமை தெரிந்ததே.

வடபகுதியைச் சேர்ந்த வர்த்தக சமூகத்தினர் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டமைக்கு கடும் ஆட்சேபத்தினைத் தெரிவித்து வரும் பல்கலைக்கழக சமூகத்தினரும் கல்விமான்களும் இந்த நடவடிக்கையைக் கண்டித்து பாரியளவிலான வெகுசனப் போராட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

அடாவடித்தனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்வதால் இது தொடர்பாக தனிநபரோ, அமைப்புக்களோ தமது எதிர்ப்பினைத் தெரிவிக்க முடியாத நிலையிலேயே வெகுசனப் போராட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தெரியவருகின்றது.

மட்டக்களப்பிலிருந்து வடபகுதியைச் சேர்ந்த வைத்தியர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு வைத்தியசாலை ஊழியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதைப் போன்று ஏனைய திணைக்கள ஊழியர்களும் தமது எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டும் எனவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, கருணா குழுவால் வர்த்தகர்கள் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், இங்கு அத்தியாவசியப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

மட்டக்களப்பு நகரிலுள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் ஒரு வாரகாலத்திற்கு மேலாகத் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதால் நகரம் வெறிச்சோடிக் காணப்படுவதோடு அத்தியாவசியப் பொருட்கள் அதிக விலையில விற்பனை செய்யப்பட்டும் வருகின்றன.

நகரில் ஐம்பதிற்கும் அதிகமான யாழ். வர்த்தகர்களுக்குச் சொந்தமான மொத்த. சில்லறை விற்பனை நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. மேலும்,நகரிலுள்ள சந்தைப் பகுதியும் வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

## 26இல் ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழகத்தினால் பிற்போடப்பட்ட விஞ்ஞானபீட மாணவர்களது கல்விச்செயற்பாடுகள் முன்னர் அறிவிக்கப்பட்டதைப் போன்று இம்மாதம் 19ம் திகதி ஆரம்பமாகாதென பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.இக்கல்விச் செயற்பாடுகள் இம்மாதம் 26ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## வெடிப்பொருள் வெடித்தது யாழ்.இல் இளைஞர் படுகாயம்!

வேலியுடன் வைக்கப்பட்டிருந்த கூரைத் தகட்டினைத் தூக்கிய போது வெடிப்பொருள் வெடித்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

கனகம் புளியடிப்பகுதியில் கடந்த வெள்ளியன்று இந்தச் சம்பவம் இடம் பெற்றது.சாவகச்சேரி மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சோதிலிங்கம் இதயகுமார் (வயது-21) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## குன்றும் குழியுமான வீதியால் போக்குவரத்து பாதிப்பு!

(மல்லாவி)

துணுக்காயிலிருந்து அம்பலப் பெருமாள் சந்திவரையிலான வீதி குன்றும் குழியுமாக இருப்பதால் போக்குவரத்துகள் மேற்கொள்ள முடியாத நிலையில் இவ் வீதி இருந்து வரு கின்றது.அண்மையில் பெய்த மழைநீரும் வீதியில் தேங்கியுமுள்ளது.

உயிலங்குளம் கோட்டைகட்டியகுளம் அம்பலப்பெருமாள் மக்கள் தங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு காலதாமதமாக இவ் வீதியூடாக சென்று வருகின்றனர் இதனால் சம்பந்தப்பட்டோர் இவ் வீதியை கவனம் எடுத்து புனரமைப்பு செய் வார்களா என மக்கள் கேட்கின்றனர். (24)

## கட்டடத் திறப்புவிழாவும் வைத்தியமுறைகள் பற்றிய விளக்கமும்



கிளிமாவட்ட மருத்துவ சங்கக் கட்டடமும் நூல்நிலையமும் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாலை 3.00 மணிக்கு தமிழீழ சுகாதார சேவை நடுவப்பணிமனைக்கு முன்பாக அமைந்துள்ள கட்டடத்தில் மேற்குறித்த மருத்துவ சங்கம் மற்றும் அதன் நூல் நிலையம் ஆகிய இரண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியகலாநிதி யூடிறமேஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிமாவட்ட மருத்துவ சங்க நூலகத்தினை வைத்தியகலாநிதி சுதாகரன் திறந்துவைத்தார் மருத்துவ சங்க அலுவலகத்தினை கிளிமாவட்ட வைத்திய அதிகாரி சுஜந்தன் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து கிளிமாவட்ட மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணரும் வெளிநாட்டில் இருந்து தற்போது இங்கு வந்து வைத்தியப் பணி புரிபவருமான வைத்தியகலாநிதி தம்பிராஜாவினால் மேற்படி உறுப்புகளில் ஏற்படும் நோய்கள் தொடர்பாகவும், அதற்கான சிகிச்சை முறைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மருத் துவக்கலாநிதிகள், மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். (லோ)

## முகமாலை கொத்தணி வாக்களிப்பு நிலையத்தில் ஈ.பி.டி.பி. தேர்தல் விதிமுறைகளை மீறி அடாவடி!

### - வாக்காளர் பெரும் விசனம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களின் முகமாலை கொத்தணி வாக்குச் சாவடி வாக்களிப்புநிலையத்தில் வாக்களிப்பு தினத்தன்று ஈ.பி.டி.பி. தேசவிரோதக் குழுவினரால் தேர்தல் விதிமுறைகளை மீறிய பாரிய அடாவடிச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அன்றை தினத்தில் தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறும் வகையில் முகமாலை கொத்தணி வாக்களிப்பு நிலையத்தில் வைத்து ஈ.பி.டி.பி தேசவிரோதக் குழுவினர் தேர்தலில் தங்களுடைய கட்சி சின்னத்திற்கு வாக்களிக்கும்படி துண்டுப் பிரசுரங்களினை கொத்தணி சாவடிநிலையத்தில் வைத்து விநியோகித்ததுடன் சில வாக்காளர்களுடைய வாக்காளர் அட்டைகளைப் பறித்துச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

அன்றைய தினம் வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று கொத்தணி வாக்குச் சாவடியில் வைத்து ஈ.பி.டி.பி உறுப்பினர் ஐயாத்துரை ரங்கேஸ்வரன் (ரங்கன்) என்ற தேசவிரோதியினால் வாக்குச் சாவடியில் வைத்து வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டதாகவும், வாக்காளர்களின் அட்டைகளை பறித்தெடுத்ததுடன் வாக்களிக்கவிடாது வாக்காளர்களை திருப்பி அனுப்பி வைத்ததாகவும் அதிகாரிகளிடம் புகார் தெரிவிக்கப் பெற்றுள்ளது.

இதேவேளை வாக்களிப்பு நிலையத்தில் வைத்து ஈ.பி.டி.பி.யினரால் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப் பெற்ற துண்டுப் பிரசுரங்கள் அனைத்தும் அவ்விடத்தில் வைத்தே வாக்காளரினால் ஈ.பி.டி.பி முன்னிலையில் கிழித்தெறியப்பட்டதுடன் அவ்வாறு கிழித்தெறியப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் காற்றில் பறந்ததும் கால்களில் மிதிபட்ட வண்ணம் இருந்தமையினையும் நேரில் அவதானிக்க முடிந்தது. (சோ)

## உள்ளத்து...

வயதுபால் வேறுபாடின்றி அனைவரும் ஒரே வேகத்தில்---- இப்பொழுது எமக்கும் எதுவித தடையுமில்லை, புகைப்படக் கருவிகளுடன் ஓட்டமாக உள்ளே நுழைந்தோம். எம்முடன் ரீரீ.என், நிதர்சனம் நிறுவன நண்பர்களும் இணைந்துகொண்டனர். அனைத்துக்காட்சிகளும் எமக்கு காவியமாகவே இருந்தன. இயன்றதை எல்லாம் புகைப்படக்கருவிகளினால் சுட்டுத் தள்ளினோம்..

பொலிசார் திகைப்படைந்த நிலையில் வாக்களிப்பதற்காகச் சென்றுகொண்டிருந்த மக்களைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"வாக்குப்போட இந்தியாவில் இருந்து கப்பலில் சனம் வந்துகொண்டி ருக்கின்றதா?" என்று பொலிசார் ஒருவர் மக்களில் ஒருவரைக் கேட்க "கப்பல் கடற்கரையில் கட்டிநிற்கின்றது" என்று பதிலுக்கு கிண்டலாகக் கூறிவிட்டு வாக்களிக்கச் சென்றுகொண்டிருந்தார்.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை மக்கள் வெள்ளம். நடந்து சென்ற மக்களுக்கு வீதி போதவில்லை. வீதியைவிட்டு அருகில் இருந்த வயல்களின் ஊடாகவும் நடக்க ஆரம்பித்தனர். இந்த நீண்டதூரத்தை எம்மால்கூட நடக்க முடியவில்லை. ஆனால் தளர்வுற்ற முதியவர்களால் நடக்க முடிந்தது எவ்வாறு என்பது புதிராகவே இருந்தது. நீண்டதூரம் நடந்து சென்றதனால் மழையில் நனைந்து சென்றது போல வியர்வையில் அனைவரும் நனைந்து போனார்கள். மிகவும் தளர்வடைந்துபோன மூதாட்டி ஒருவரை "அம்மா இப்ப அவசரமில்லை எங்காவது ஓரமாக நின்று ஆறுதலாக வாங்கோ" என்று கூறிப்பார்த்தோம்.

"போறசீவன் போறது தான்.ஆனால் இதுமாதிரிக்கிடைக்காது" என்றார்.

வாக்களித்துவிட்டும் சிலர் நடந்து வந்துகொண்டிருந்தார்கள்.அவர்களிடமும்

எமது வழமையான கேள்வியைப் போட்டோம் " வீட்டுக்குத்தான்" என்று உற்சாகமாகக் கூறிக்கொண்டு சென்றனர்.

"பெரிய வெற்றி தம்பி இன்றைய நாளை செத்தாலும் மறக்க மாட்டேன்" என்றார் ஒருவர்.

ஐயா இப்பொழுது உங்கள் மனதிலை என்னபடுது என்று எம்முடன் நடந்துவந்துகொண்டி ருந்த முதியவர் ஒருவரைக்கேட்டோம். "நாம் என்னத்தைத் தம்பி பெரிசாய் சொல்லப்போறன் நீங்கள் தான் பார்க்கிறீங்களே. இதையெல்லாம் சொல்ல எனக்கு வல்லமையில்லை, ஆனால் ஒரு சரித்திரம் எண்டு மட்டும் சொல்லுவன்" என்றார். நாங்கள் புகைப்படம் எடுப்பதற்காக அங்கு உயரமாக அடுக்கப்பட்டிருந்த வெற்றுளிபொருள் கொள்கலன்கள் மீது ஏறிக்கொண்டோம். இருபுறமும் பார்த்தபோது அந்த வீதி முழுவதுமே மக்கள் வெள்ளத்தால் நிரம்பியிருந்தது தெரிந்தது. ஒ ாறு மக்கள் வெள்ளத்துடன் நாமும் வாக்களிப்பு நிலையத்துக்கு போய்ச் சேர்ந்தோம்.

சுடும் வெய்யிலின் மத்தியில் மக்கள் கூட்டம் கூட்டமாக வாக்களிப்பதற்காக தமக்குரிய நிலையத்தின் முன்பாக காத்துநின்றனர். கிராம அலுவலர்கள், அதிகாரிகள், தொண்டர்கள், அவர்களை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தனர். வாக்களித்தவர்கள் ஒருபுறமாக வெளியேறிக்கொண்டிருந்தனர். அவ்வாறு வெளியேறிக் கொண்டிருந்த செம்மலையைச் சேர்ந்த 84வயது நிறைந்த பொன்னையா- செல்லமணிஎன்ற மூதாட்டியை இன்றைய வாக்களிப்பு எப்படி இருந்தது என்று கேட்டபோது நாங்கள் எங்களுக்குரிய வாக்குகளை எந்தவித பயஉணர்வுமின்றிப் போட்டுவிட்டோம் நாங்கள் செம்மலையிலிருந்து வாகனத்தில் வந்து புளியங்குளத்திலிருந்து நடந்துவந்தே வாக்களித்தோம் என்று கூறினார்.

அவரை "84 வயதிலும் இவ்வளவு கஸ்ரப்பட்டு ஏனம்மா வாக்களிக்க வேண்டும்? இந்த ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?" எனக் கேட்டபோது "என்ன குஞ்சு இதுக்கு இல்லாத ஜீவன்கள் வேற என்னத்துக்கு"என்று தனது பொக்கை வாயால் கூறிய மூதாட்டி தான் வீட்டுச்சின்னத்திற்கு வாக்களித்ததாகவும் கூறிமுடித்தார்.

அடுத்ததாக தண்ணீரூற்றைச் சேர்ந்த தவராஜா (வயது 53) என்பவர் தெரிவிக்கையில் தான் தேர்தல் தினத்தன்று காலை 4.00 மணிக்குப் புறப்பட்டு புளியங்குளத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்களுடன் சேர்ந்து கால் நடையாக வந்து வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்திருப்பதாகக் கூறினார். எதற்காக வீட்டுச்சின்னத்தை தெரிவுசெய்தீர்கள் என கேட்டதற்கு நாம் நீண்டகாலம் பட்ட பெரும் துன்பங்களை நீக்குவதற்காக வீட்டுச்சின்னத்தில் போட்டியிடுகின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு குரல் கொடுத்துவருகின்றது. எனவே நாம் எமதுபிரச்சினைகளை தீர்க்கக்கூடியவர்களையே தெரிவு செய்வோம் என்றார்.

அடுத்ததாக விசுவமடு வைச் சேர்ந்த வி. பாஸ்கரன் என்பவர் தேர்தலில் பற்றி கூறுகையில். தான் இன்று காலை விசுவமடுவில் இருந்து புறப்பட்டு வந்ததாகவும் அங்கு பெருமளவானவர்கள் வருவதற்காக காத்திருக்கிறார்கள் என்றும் இவ்வளவு மக்கள் வாக்களிக்க வருவார்கள் என்று தான் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை எனவும் தான் தமிழ்த் தேசியத்திற்காகக் குரல் கொடுக்கும் தமிழ்க் கூட்டமைப்பின் வீட்டுச்சின்னத்துக்கே வாக்களித்ததாகவும் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த நல்லையா என்பவர் கருத்துத் தெரிவிக்கையில்; அன்று காலை புதுக்குடியிருப்பில் இருந்து புறப்பட்டு வந்து வாக்களித்திருப்பதாகவும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்திற்கு தனது வாக்கைச் செலுத்தியிருப்பதாகவும் இவ்வளவு தொகையில் மக்கள் கூடி வாக் களிக்க வந்திருப்பதைப் பார்க்கும் போது மகிழ்வாக இருக்கின்றது என்றும் தான் நீண்டகால இடைவெளியின் பின்னர் இம்முறையே வாக்களிப்பதாகவும்தெரிவித்தார்.

அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த இராகுலன் என்பவர் தெரிவிக்கையில் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தின் ஒரு உச்சக் கட்டமாக விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற கருத்தை முன்வைத்து போட்டியிடுகிறது. எனவே வீட்டுக்கு நாம் வாக்களித்தோம் என்றார்.

அடுத்துத் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த கொக்கிளாய் கிராம அலுவலர் ம.விமலகாந்தன் என்பவர்தெரிவிக்கையில் கடந்த காலங்களில் இந்த மக்களின் வாக்களிக்கும் சந்தர்ப்பம் இல்லாதிருந்தது. இம்முறை அதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அதனால் மக்கள் தமது சனநாயக உரிமையை நிலைநாட்ட யாருடைய வற்புறுத்தலுமின்றி வாக்களித்து வருகின்றார்கள். இந்த மக்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இன்று வாக்களிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். உண்மையில் தமது இருப்பிடங்களில் இருந்து 500 மீற்றர் இடைவெளி தூரத்திற்குள் வாக்களிக்க வேண்டியமக்கள்55 கிலோமீற்றர்களுக்கப்பால் சென்று வாக்களிக்க வேண்டியநிலை இந்த மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.இது இலங்கையில் எங்குமே நடைபெறாத ஒரு சம்பவம் என்றார். ஓமந்தை கொத்தணி வாக்களிப்பு நிலையத்தில் தேர்தல் தொடர்பான கருத்துப்பகிர்வுகளை நிறைவு செய்துகொண்டு நிலைமைகளை அவதானித்துக்கொண்டிருந்தோம். இங்கு காலை 9.00மணிக்குப் பின்னரும் 10.30 க்கு இடையிலும் மிக அதிகப்படியான வாக்களிப்பு நடைபெற்றது. பின்னர் 12 மணியுடன் வாக்களிப்புநிலையம் முற்றாக வெறிச்சோடிப்போயிருந்தது.

உண்மையில் இம்மக்கள் வாக்களிப்பதற்காக பட்டதுயரத்தை வெறுமனே சொல்லில் கூறிவிட முடியாது அவர்கள் தமது போராட்டத்தில் கொண்டுள்ள உறுதிப்பாட்டை வாக்களித்ததன் மூலம் மட்டுமல்ல வாக்களிக்க அவர்கள் தாங்கிக்கொண்ட சிரமத்தையும் வைத்துக் கொண்டே மதிப்பிட வேண்டும். இவ்வாறு மதிப்பிட்டால் அவர்களின் இலட்சியம் நிறைவேறியே தீரும் என்று நிச்சயமாகக் கூறலாம்.



## சிந்தனைக்கு

விடுதலையை வேண்டி நிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப்பாட்டை,எந்தவொரு சக்தியாலும் அழித்து விடமுடியாது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 06 -04-2004

# முரண்பாடுகளின் கூட்டு!

புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான முயற்சியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி, மக்களின் ஆணையை ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கூறி ஆட்சியமைக்கும் எந்த முயற்சியிலும் ஈடுபடாமல், விலகிக்கொண்டுள்ளது.

இந்நிலையில் ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் அமைப்பதற்குத் தேவையான மிகுதி ஆசனங்களைத் தேட முற்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக எவ்அரசிலும் அமைச்சராகவே இருந்துவரும் ஆறுமுகம் தொண்டமான், ரவூப் ஹக்கீம் ஆகியோருடன் ஐ.ம.சு.முன்னணி பேரங்களில் ஈடுபட்டுள்ளதெனலாம்.

ஐ.தே.கட்சி அரசாங்கம் அமைக்கும் முயற்சி எதிலும் ஈடுபடாது இருப்பதனால் ஐ.ம.சு.முன்னணி பேரங்களை இலகுவாக நடத்தக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். ஆகையினால் ஐ.ம.சு.முன்னணி ஆட்சியமைப்பதில் பெரும் சிக்கல்கள், நெருக்கடிகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாக இல்லை.அவ்வாறு இல்லாவிடினும் கூட,சனாதிபதி சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைக்கக் கூடும்.

ஆனால், அமையவுள்ள இவ் அரசாங்கமானது அனைத்து முரண்பாடுகளின் ஒரு கூட்டாகவே இருக்க முடியும். ஆகையினால், இந்த அரசாங்கம் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் இவ் அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை எந்தளவிற்கு நிறைவேற்றும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கமுடியும். அதாவது எதிர்வு எதுவும் கூறமுடியாததொரு நிலையே உள்ளது.

ஐ.ம.சு.முன்னணியின் இரண்டு பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும்(மக்கள் விடுதலை முன்னணிக்கும்) இடையிலான உடன்பாடு இவ்விரு கட்சிகளையும் தேர்தலில் ஒருங்கிணைந்து போட்டியிடுவதற்கு வழி ஏற்படுத்தியுள்ளதே ஒழிய இரண்டையும் கொள்கை ரீதியில் இணைத்துள்ளது என்று கூறுவதற்கில்லை. அதாவது ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைத் தோற்கடிப்பது குறித்த விடயத்தில் அவர்களிடம் இருந்த உடன்பாடு ஏனைய விடயங்களில் இருந்ததாக இல்லை.

குறிப்பாக, இனப்பிரச்சினை தொடர்பாக இருதரப்பின் இடையேயும் இணக்கப்பாடானதொரு நிலைப்பாடு இருந்ததாக இல்லை. இந்தவகையில் இக்கூட்டணிக்குள் தற்பொழுதும் கொள்கை அளவில்கூட இணக்கம் காணப்படாத விடயங்கள் உள்ளன என்பதே உண்மையாகும். இதனை இருதரப்பும் ஏற்றுக்கொண்டுள்ளன. இந்நிலையில் தற்பொழுது ஆட்சியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இக்கூட்டணி மேலும் முரண்பாடு கொண்டவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

இதில் - அதாவது தேவையான ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதில் ஐ.ம.சு.முன்னணி வெற்றிபெறும் என்றே எதிர்பார்க்கலாம். ஆனால் இம்முயற்சியால் இக்கூட்டணியுடன் இணையக்கூடியவர்களுடனும் கொள்கை ரீதியில் இவர்களால் இணக்கப்பாடு ஒன்றிற்கு வரமுடியாது இருக்கும் என்றே துணிந்து கூறமுடியும்.

எடுத்துக்காட்டாகக் கூறுவதனால், ஐ.ம.சு. முன்னணி பேரங்களில் ஈடுபடக் கூடியதான கட்சிகளில் ஒன்றான முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, தென்கிழக்கு பிராந்திய அலகு குறித்துப் பேசி வருகின்றது. ஆனால், ஐ.ம.சு. முன்னணியின் முக்கிய பங்குதாரியான ஜே.வி.பி.யோ, இதனை, ஏற்கனவே நிராகரித்துவிட்டது. அதன் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அதற்கு இடமிருப்பதாக இல்லை.

இந்நிலையில், ஐ. ம. சு. முன்னணியுடன் பேரங்களில் ஈடுபடும் கட்சிகள் எவையுமே ஆட்சியில் பங்குபற்றிப் பேசலாமே ஒழிய தமது கொள்கை அறிவிப்புக்கள் குறித்து எதுவுமே பேசவோ, இணக்கப்பட்டிற்கு வரவுமோ கூடியதொரு சூழ்நிலை இருப்பதாக இல்லை. ஆகையினால், ஐ.ம.சு. முன்னணியும் சரி, அவர்களுடன் ஆட்சியில் பங்கேற்பவர்களாயினும் சரி கொள்கை அடிப்படையில் இணக்கப்பாடு ஒன்றிற்கு வருதல் என்பது சாத்தியமற்றதொன்றாகவே இருக்கும்.

இந்த வகையில், புதிய அரசாங்கம் முரண்பாடுகளின் கூட்டு ஒன்றாகவே இருக்க முடியும். ஆகையினால், இலங்கை இன்று எதிர்நோக்கும் நெருக்கடிகளை இத்தகைய முரண்பாடுகளின் கூட்டாகக் காணப்படும் அரசாங்கம் ஒன்றினால் எதிர்கொண்டு வெற்றிபெற முடியுமா? என்பதே கேள்வியாகும்.

கடந்த ஐ.தே.மு. அரசாங்கத்தை மக்கள் நிராகரித்தமைக்குக் காரணம் எதுவாகவும் இருக்கலாம். ஆனால், அவ் அரசாங்கம் கொள்கை அளவில் ஒரு இணக்கப்பாட்டைக் கொண்டதாக இருந்தது என்பது நிராகரிக்கப்பட முடியாததொன்றாகவே இருந்தது. இதுவே பல நெருக்கடிகள் மத்தியிலும் சமாதான முயற்சிகளில் சில முற்போக்கான நடவடிக்கைகளையாவது மேற்கொள்ள முடிந்தது. ஆனால், தற்பொழுது அக்கட்சிக்கு வரவுள்ள அரசாங்கம் முரண்பாடான கொள்கை கொண்டவற்றின் தொகுப்பாகையால் இலங்கையின் அரசியல் எதிர்காலம் குறித்து எதிர்வு கூறுதல் என்பது சாத்தியமானதொன்றாக இல்லை.

# தமிழரின் தனித்துவமான உணர்வுகளின் வெளிப்பாடே எம் வெற்றிக்குக் காரணம்

## மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ் மக்களின் தனித்துவமான உணர்வுகளின் வெளிப்பாடே தனதுவெற்றிக்குக் காரணம் என மலையக மக்கள் கட்சியின் தலைவரும் நுவரெலியா தேர்தல் தொகுதியில் வெற்றிபெற்ற வருமான பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலையில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பல கட்சிகள் தாம்வென்று விட வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டு பெரும்பான்மைக் கட்சிகளுடன் சேர்ந்து போட்டியிட்டன.

ஆனால் மலையக மக்கள் முன்னணி மாத்திரமே தனது கொள்கைகளை மாற்றாது போட்டியிட்டு வெற்றியீட்டியது என்றார்.

"நாம் ஒவ்வொரு தேர்தலிலும் போராட்டத்திலும் முன்வைக்கும் அடிகள் அடுத்த கட்ட நகர்வுகளுக்கு எம்மை தயார்படுத்தும் களமாகவே அமைந்திருக்கின்றன. இனியும் அவ்வாறு சவால்களுடன் எம்மைத் தயார் படுத்திக் கொள்ள வெண்டும். இத்திறமைகளைக் கொண்டுள்ள மலையக மக்கள் முன்னணிக்கு என்றுமே வெற்றி கிடைக்கும் என்பதில் ஐயமில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் முடிவுகள் வெளியான பின்னரும் வன்முறைகள் தொடர்ந்து அதிகரிப்பு!

## -24 மணிநேரத்தில் 28 வன்முறைகள்

(கொழும்பு)

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து பல்வேறு தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுள்ளன.

நேற்றுக்காலை 6.00மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் 28வன்முறைச் சம்பவங்கள் தேர்தல் வன்முறை தடுப்பு பொலிஸ் பிரிவிற்கு கிடைத்துள்ளன. இவற்றுள் 26குற்றவியல் சட்டங்களை மீறியவை எனவும் ஏனைய இரண்டும் தேர்தல் சட்டங்களை மீறியவையெனவும் கூறப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து நேற்றுவரை இடம்பெற்றுள்ள தேர்தல் வன்முறைகளின் எண்ணிக்கை 1479 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள் 1185 முறைப்பாடுகள் குற்றவியல் சட்டங்களை மீறியவை எனவும் ஏனைய294 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியவை யெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எமது கட்சி கொள்கையின் அடிப்படையில் ஐ.ம.சு.முன்னணியுடன் பேசத் தயார்

## -பி.பி.சி. பேட்டியில் ஹக்கீம் தெரிவிப்பு

ஐக்கியமக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் பலர் என்னுடன் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களை பரிமாறினார்கள். ஆயினும் நாங்கள் அரசியல் உடன்பாடுகள் சம்பந்தமாக எந்தப் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பிக்கவில்லையென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பி.பி.சிக்கு நேற்று முன்தினம் அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனது கட்சியின் கொள்கை அடிப்படையில் அரசியல் உடன்பாடுகளைக் காணமுடியும் ஏற்கனவே ஐதே. கட்சியுடன் ஓர் புரிந்துணர்வு உடன்படிக்கையை செய்துள்ளோம். இதன் பின்னணியில் ஐ.தே.கட்சிக்கு ஆட்சி அமைக்கின்ற சந்தர்ப்பம் இல்லாமல் போகின்ற வேளை' மாற்று கட்சிகளுடன் அவர்கள் எந்தக் கொள்கையின் அடிப்படையில் தங்களின் அமைச்சைக் கொண்டு சொல்லப் போகின்றார்கள் என்பதற் கமைய யத்தான் கூட்டமைப்புடன் சேர்வது சம்பந்தமான எந்த முடிவும் எடுக்கலாமென அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தாம் ஆட்சி அமைப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசையும் தங்களுடன் சேருமாறு கேட்டுக் கொண்டால் என்ன செய்வீர்கள் என்று பி.பி.சி செய்தியாளர் கேட்ட போது அதற்குப்பதிலளிக்கையிலேயே ரவூவ்ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதேவேளை இது வெறும் அமைச்சு பொறுப்புக்கள் பற்றிய விடயம் மட்டுமல்ல எமது சமூகத்தின் எதிர் காலம் குறித்த விடயம். எனவே நாங்கள் பல விடயங்கள் சம்பந்தமாக ஆராயவேண்டுமெனவும் தெரிவித்தார்.

# தேசிய அரசமைக்கும் சனாதிபதியின் கோரிக்கை ஐ.தே.க.வால் நிராகரிப்பு

(கொழும்பு)

நடந்து முடிந்த தேர்தலில் இரு பிரதான கட்சிகளும் ஆட்சியமைக்கக் கூடிய பெரும்பான்மை வாக்குகளைப் பெறத்தவறியுள்ள நிலையில் தேசியஅரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக ஐ.தே.கட்சியின் பிரதித்தலைவர் கருஜய சூரியாவுக்கு சந்திரிகா விடுத்த அழைப்பு ஜயசூரியாவினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள நிலையில் தேசியஅரசாங்கம் ஒன்றை அமைப்பதே சிறந்தது என சனாதிபதி கருதுவதாகவும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சனாதிபதி மாளிகையின் உயரதிகாரியொருவர் கருஜெய சூரியாவிடம் தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டார் இதற்கு ஆர்வம் உள்ள ஏனைய ஐ.தே.க.உறுப்பினர்களையும் இணைத்துக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டது.

தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜெயசூரியா கலந்தாலோ சித்ததாகவும் அதற்கு ரணில் விக்கிரமசிங்க, தனியாக அரசை அமைக்க மக்கள் ஆணை வழங்கியிருப்பதால் ஐ.ம.சு.முன்னணி ஆட்சியமைக்க முடியும் என பதில் அளித்துள்ளார்.

# முரளியின் பந்துவீச்சு சோதனை முடிவுகள் சில தினங்களில் வெளியாகும்

(கொழும்பு)

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள முரளிதரனின் "தூஸ்ரா" பந்துவீச்சு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கை இன்னும் சில நாட்களுக்குள் கிடைக்குமென எதிர்பார்ப்பதாக சிறிலங்கா கிரிக்கெட் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி துலிக்மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

உடற்தொழில்நுட்பவியல் நிபுணர் லூஸ்எலியத்தின் பார்வையின் கீழ் மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை சம்பந்தமாக தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் இவ் அறிக்கையை சிறிலங்கா கிரிக்கெட் சபையின் பந்துவீச்சு பரிசோதனை குழு ஆய்வு செய்து 06 வாரத்திற்குள் அது தொடர்பான அறிக்கையை சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முரளிதரன் சிம்பாவ்வே சுற்று பயணத்தின் போது விளையாடுவது உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## -சார்க் விளையாட்டுப் போட்டி-
# தடகள ஓட்டப்போட்டியில் சிறிலங்காவிற்கு 4 தங்கம்!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெற்று வரும் ஒன்பதாவது சார்க் விளையாட்டுப் போட்டியின் எட்டாவது நாளான நேற்று தடகள ஓட்டப்போட்டியில் சிறிலங்காவிற்கு நான்கு தங்கப் பதக்கங்களும், இரண்டு வெள்ளிப் பதக்கங்களும் கிடைத்துள்ளன. இதற்கமைய எட்டவாது நாளான நேற்று சிறிலங்கா 12 தங்கப் பதக்கங்களையும், 27 வெள்ளிப் பதக்கங்களையும், 46 வெண்கலப் பதக்கங்களையும் வென்று மூன்றாவது இடத்திலும், இந்தியா 85 தங்கப்பதக்கம் உட்பட 148 பதகங்களைவென்று முதலாம் இடத்திலும் பாகிஸ்தான் 28 தங்கப்பதக்கங்கள் உட்பட 115 பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்திலும் உள்ளது.

# புலிகளே தமிழரின் ஏகபிரதிநிதிகள்

# தேர்தல் முடிவு சொல்லுவது இதுவே

## அதிக வாக்குகளைப்பெற்ற கஜேந்திரன்

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்ற பொதுத்தேர்தல் முடிவுகள் தமிழ் மக்களது ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளே என்பதை தெளிவாகப்பறைசாற்றியுள்ளது. இதனால் இனிமேல் எவரும் புலிகளைப் பயங்கரவாதிகள் என பொய்பிரசாரம் செய்யமுடியாது என தமிழ்தேசியக் கூட்டமைப்பு சார்பாக யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகப்படியான விருப்புவாக்குகளால் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் எனவும் அவர்களிடமிருந்து தமிழ் மக்களை காப்பாற்றப் போவதாகவும் பொய்ப்பிரச்சாரம் செய்து பேரின வாதிகள் இன அழிப்பிற்கான யுத்தத்திற்கான உதவிகளை சர்வ தேசத்திடம் இருந்து பெற்றுவந்தன.

ஆனால் தமிழ் மக்களது ஏகபிரதிநிதிகள் புலிகள் மட்டுமே, இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் குறித்து புலிகளுடன் மட்டுமே, பேசவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையுடன் கடந்த தேர்தலில் போட்டியிட்ட கூட்டமைப்பினருக்கு தமிழ் மக்கள் தம்முழு ஆதரவையும் தந்து அமோக வெற்றியீட்டச் செய்துள்ளனர்.

இது புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிகள் என்ற சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன் ஈ.பி.டி.பி யினர் மற்றும் வி. ஆனந்தசங்கரியின் குழுவினர் ஆகியோரை படுத்தோல்வி அடையச் செய்தமை புலிகள் மட்டுமே தமிழ் மக்களது ஏகபிதிநிதிகள் என்பதையும் உலக அரங்கில் பறைசாற்றியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(33)

# சிறுபான்மை அரசாங்கம் ஒன்றினால் சமாதானத்தை முன்னெடுக்க முடியாது

## -ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு வாய்ப்புக்கிட்டியுள்ளது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால், சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லமுடியாது என ஐக்கியதேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று கிராமோதய நிலையத்தில், ஊடகவியலாளர் மாநாட்டை அவர் நடத்தினார் இந்த முறை நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை அங்கீகாரத்தை வழங்கவில்லை எனவே சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு வாய்ப்பு கிட்டியுள்ளது. இது நிரந்தரமானதாக இருக்கமுடியாது அத்துடன் அதனால் சமாதான பேச்சுவார்த்தையையும் முன்னெடுத்துச் செல்லமுடியாது. 1960ம் ஆண்டில் இவ்வாறான சிறுபான்மை அரசாங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் கலைக்கப்பட்டு தேர்தல் ஒன்று நடத்தப்பட்டது. ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்குள் இன்றும் பிரதமர் பதவி ,அமைப்புக்களில் உடன்பாடு ஏற்படவில்லை. இந்த நிலையில் அந்த முன்னணி எதிர்வரும் 22ம் திகதி நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மையுனை நிருப்பிக்க வேண்டியஅவசியம் ஏற்பட்டுள்ளது எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட் டுள்ளார்.

ஆறுமுகம் தொண்டமானுடன் சிறிலங்கா முஸ்ம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீமுடன் தொடர்பிருப்பதாகவும் அவர்களள் இருவரும் இன்னமும் தொடர்ந்தும் தமது கட்சிக்கு ஆதரவுவழங்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் உரையாற்றிய ரணில்விக்கிரமசிங்க ஜே.வி.பி இந்தத் தேர்தலில் அதிக வெற்றியை பெற்றதன் காரணமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி யினர் நிராகரிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என கூறினர். எனது ஐக்கிய தேசியக்கட்சியை பொறுத்தவரையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைக்காட்டிலும் ஜே.வி.பி.யுடனேயே போட்டிக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது என கூறிய அவர் அதனை எதிர் கொள்ள தாம் தயார் என குறிப்பிட்டார்.

## ஜெனிவாவில்...

அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், விடுதலைப்புலிகளின் சட்ட ஆலோசகர் ருத்திரகுமாரன், அரங்க செயற்பாட்டுக்குழுவைச் சேர்ந்த விந்தன்,சிதம்பரநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

முன்னதாக நேற்றுக் காலை செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. அருட்தந்தை கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் தலைமையிலான இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மூத்த உறுப்பினர் கரிகாலன், ஆலோசகர் வி.ருத்ரகுமாரன், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சிதம்பரநாதன், சுவிஸ் வாழ் தமிழ் அமைப்பின் கூட்டமைப்பின் செயலர் அன்ரன் பொன்ராஜா ஆகியோர் பங்கேற்றனர். பெருந்திரளான எண்ணிக்கையில் ஊடகவியலாளர்கள் பங்கேற்றிருந்த இச்செய்தியாளர் சந்திப்பில், கௌசல்யன், கரிகாலன் வி.ருத்ரகுமாரன் ஆகியோர் பல விளக்கங்களை யும் வழங்கினார்கள். மட்டக்களப்பில் தற்போதுள்ள நிலைப்பாடுகள் பற்றி சர்வதேச சமூகத்திற்கும் தாம் விளக்கம் கொடுத்து வருவதாகவும், அவை தற்காலிகமானவையே என்றும் கரிகாலன் சுட்டிக்காட்டினார். சட்டத்தரணி வி.ருத்ரகுமாரன் தமது விளக்கத்தின் இறுதியில் தற்போதைய தேர்தல் குறித்தும், தேர்தலின் பின் எழுந்துள்ள நிலைப்பாடுகள பற்றியும் விளக்கமளித்த துடன் ஊடகவியலாளர்களின் பலதரப்பட்ட கேள்விகளுக்கும் பதலளித்தார். அருட்தந்தை கலாநிதி எஸ்.ஜே. இம்மானுவேல் ஊடகவிய லாளர் மாநாட்டை ஆரம்பித்துவைத்து விளக்கமளித்த போது ஈழத்தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகள், அபிலாசைகள், அதற்கான நீண்டகாலப் போராட்ட வரலாறு அதன் இழப்புக்கள், தியாகங்கள், தற்போதைய நிலைப்பாடுகள் பற்றியும் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு எப்படி அமைய வேண்டும் என்பது குறித்தும் தெளிவான விளக்கத்தை வழங்கினார்.

## கதிர்காமருக்குப்...

அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது. தமக்கு பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டுமென்பதே மகிந்த ராஜபக்ஷவின் கருத்தாகும்.

இந்த நிலையில் லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக்குவதில் ஜே.வி.பி. தீவிரமான ஆதரவை வெளிக்காட்டியுள்ளது. என்றாலும் பௌத்த பிக்குமார் மற்றும் மகிந்த ராஜபக்ஷவின் எதிர்ப்பால் கதிர்காமரின் பதவிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நேற்று இது தொடர்பில் முழுநாள் பேச்சுவார்த்தை இடம்பெற்றபோதும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் இன்றைய தினம் பிரதமரும் அமைச்சர்களும் பதவியேற்பர் என சனாதிபதியின் ஊடக செயலர் ஜினதாச பீரிஸ் தெரிவித்துள்ள இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு இணையலாம் என எதிர்பார்க்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தமது நிலைப்பாட்டை மாற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு அமைச்சரவை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களில் இரண்டு தேசியப் பட்டியலில் இரண்டு உறுப்பினர்கள் என்ற கோரிக்கையை அது முன்வைத்தபோதும் அதனை சனாதிபதியின் தரப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. இதனையடுத்து தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்துகொண்டு பிரச்சினைகளைப் பொறுத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவையும், எதிர்ப்பையும் வெளிக்காட்டப்போவதாக அந்த இ.தொ.காங்கிரஸ் முடிவெடுத்துள்ளது. மலையக மக்கள் முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் பேசியபோதும், இறுதி முடிவுக்காக தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஆலோசனைகளைப் பெறவுள்ளது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்த வரை இறுதி முடிவு எதுவும் எடுக்கப் படவில்லை என்றாலும் அந்த கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் இனப்பிரச்சினை தொடர்பான கொள்கையையும் கடுமையாக விமர்சித்துள்ளது.

பிந்திக்கிடைத்த தகவலின்படி. பிரதமர் பதவி தொடர்பில் இரகசிய வாக்கெடுப்பு ஒன்றுக்கு இணக்கம் ஏற்பட்டுள்ளது. அதே நேரம் தேசியப்பட்டியலில் உள்ள லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமராகப் பதவியேற்க வேண்டுமானால் அவர் முதலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு சில தினங்கள் சென்ற பின்னரே அவரால் பிரதமராக பதவியேற்கமுடியும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## உறுதியான...

ஈடுபட்ட எமது கரையோரவாழ் மக்கள் விடுதலைப்புலிகளின் கரங்களைப் பற்றி இறுக்கமாக நிற்பதை அவர்களின் உணர்வுவீச்சு காட்டி நிற்கின்றது என விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் முல்லைமாவட்ட அரசியல்துறையினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## சனாதிபதி...

றார்கள் என்பதுதான் இப்போது கேள்விக்குறியாக உள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி சிறுபான்மை அரசாக அமைக்கப் போகின்றார்களா, அல்லது ஒரு தளம்பலற்ற முழுஆறு வருடங்களுக்கும் தொடர்ந்து இருக்கக்கூடிய ஒரு அரசை அவர்களால் அமைக்க முடியுமா என்பதே கேள்விக் குறியாக உள்ளது.

ஒரு ஸ்திரமான அரசொன்றை அமைப்பதானால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 113 ஆசனங்கள் தேவை. ஆனால் இப்பொழுதுள்ள நிலைமையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் டக்ளஸ் தேவானந்தாவின் ஒரு ஆசனம் மற்றும் மலையக மக்கள் முன்னணி சந்திரசேகரன் ஆகியோரை இணைத்தால் 113 ஆசனங்கள் கிடைக்கும். அதற்கான முயற்சியும் நடக்கின்றன.

இதேவேளை அரச செய்தி ஊடகங்கள், கருணா குழுவின் மட்டு-அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழரசுக்கட்சி வேட்பாளர்களையும் இணைப்பதாக பிரச்சாரம் செய்து வருகின்றனர். இந்நிலையில் தொண்டமான் அவர்கள் இதுவரை திட்டவட்டமான ஒரு முடிவை அறிவிக்கவில்லை. இன்னமும் இழுபட்டுக்கொண்டிருக்கிறது.

சந்திரசேகரனின் நிலைப்பாடும் இதுவரை வெளிப்படையாகத் தெரியவில்லை.

ஆனால், டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்தவரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் நெருக்கமாகவே இருக்கின்றார்.

ஆனால் மட்டு-அம்பாறை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிக்குமென ஊடகங்கள் கூறுவது நம்பத்தகுந்ததாக இல்லை.

நான் மட்டக்களப்பிலுள்ளநிலைமைகளை அவதானித்து வருகின்றேன். அங்குள்ள நிலைமைத்தின் படி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் போட்டியிட்டு வென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒரு தமிழ்த் தேசியக் கோட்பாட்டின் அடிப்படையில் தான் தாங்கள் பிரச்சாரங்களைச் செய்துவந்தார்கள். அந்த வகையில் அதற்கு முற்றும் முரணான கோட்பாடுகளைக்கொண்ட ஜே.வி.பி. போன்ற கட்சிகளை உள்ளடக்கிய சந்திரிகா அரசின் அங்கம் வகிக்க அங்கு யாரும் தயாராக இருக்கவில்லை.

அந்த வகையில் அரச ஊடகங்கள் மட்டக்களப்பு- அம்பாறையைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் ஆதரவளிக்கப்போகின்றார்கள் என்று கூறுவது ஒரு முழுமையான தவறான தகவல் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன் என்றார்.

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம் ஒருவர் கடத்தப்பட்டார்

மட்டக்களப்பு ஜெயந்திபுரத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டிற்கு இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளதுடன் இவருடன் கூடச்சென்ற இளம்குடும்பஸ்தர் ஒருவர் காணாமற்போயுள்ளார்.

இந்தச்சம்பவத்தின்போது காயமடைந்தவரான சுப்பிரமணியம் சிவகுமார் என்பவர் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, காணாமற்போனதாகக் கருதப்படும் குமார் எனப்படும் நாகேந்திரா குபேந்திரா என்பவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான பின்னரே துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்களால் கடத்தப்பட்டதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி பொலிசார் தெரிவிக்கையில், இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களோ அல்லது அதற்கான பின்னணியோ இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிஸ் நிலையத் தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்ரர் கரிச்சந்திர தெரிவித்தார்.

இதேவேளை, காணாமற்போன நபர் ஏற்கனவே விடுதலைப்புலிகள் அமைப்பிலும், புளொட் அமைப்பிலும் இருந்தவர் எனவும் சில காலங்கள் இராணுவப் புலனாய்விலும் சேவையாற்றியவர் எனவும் கூறப்படுகின்றது.

# ராஜன் சத்தியமூர்த்தியின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு எரிப்பு

கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்டு அன்னை பூபதி நினைவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டிந்த தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் ராஜன் சத்தியமூர்த்தி மற்றும் அவரது மைத்துனர் கந்தையா கனகசபை ஆகியோரது உடல்கள் அவ்விடத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இளைஞர் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க மேற்படி உடல்களை எரியூட்டப்பட்ட இடத்திற்குச் சென்ற மற்றொரு குழுவினர் எரிந்த சடலத்தின் எஞ்சிய பாகங்களை மீண்டும் எடுத்துச் சென்று அன்னைபூபதி பூங்காவில் மீண்டும் அடக்கம் செய்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விளையாட்டுப் போட்டி

கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவு கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்றும், நாளையும் கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கு இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம் தலைமை வகிக்கவுள்ளார்.

## வீரவணக்கம்...

யார்கட்டு) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்குத்தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## தமிழ்த்...

வார்கள் எனவும் தெரியவருகின்றது. இன்று மாலை கொழும்பில் கூடும் இப்பாராளுமன்ற உறுப்பினர்கள், தமது பாராளுமன்றக்குழுத் தலைவரைத் தெரிவுசெய்யவுள்ளதோடு, தமது அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளைச் சந்தித்து எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகளை நடத்துவர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமிழரசுக்குக்கிடைக்கப் பெற்றுள்ள இரண்டு தேசியப்பட்டியல் உறுப்பினர்களில் ஒருவர் வடபகுதியில் இருந்தும், ஒருவர் கிழக்குப் பகுதியில் இருந்தும் நியமனம் செய்யப்படவுள்ளதாகத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

## இத்தேர்தலில்...

யில், சிறிலங்காவில் இரண்டு ஆண்டுகள் சமாதானம் நிலவிய போதும் கூட இங்கு தேசியவாதத்திற்கான ஆதரவு இன்னமும் பலமாக இருக்கிறது என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

அதாவது பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களில் சுமார் காற்பங்கு உறுப்பினர்கள் தமிழ்ச சிறுபான்மையினருடன் அதிகாரப் பகிர்வினைச்செய்து கொள்ள கூட்டாட்சி அமைப்புத்தேவையில்லை என்று கூறுகிறார்கள்.

அவர்களைப்பொறுத்தவரை சிறிலங்காவில் உள்நாட்டுப்போர் எழுவதற்கு இனப்பிரச்சினை என்பது காரணமில்லை. அது ஒருதனிப்பட்ட பயங்கரவாதப்பிரச்சினை என்பதே.

ஆனால் இத்தகையவாதம் தமிழ்ப் பகுதிகளில் இருந்து வந்திருக்கும் தேர்தல் முடிவுகளின் முன்பு எடுபடாது. தமிழ்ப்பகுதிகளைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகள் ஆதரிக்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கு அமோக வெற்றிகிடைத்துள்ளது. இதைஅடுத்து நாடாளுமன்றத்தில் மூன்றாவது பலம்வாய்ந்த கட்சியாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆகியுள்ளது. இதுவரையும் விடுதலைப் புலிகள் பெறாத நாடாளுமன்ற அங்கீகாரத்தையும் விடுதலைப் புலிகளுக்கு இது அளித்துள்ளது. சிறிலங்காவின் சமுதாயத்தில் உள்ள ஆழமான பிளவை இந்த நாடாளுமன்றம் பிரதிபலிப்பதாகவே தெரிகிறது என்றார்.

அத்துடன் சிறிலங்காவில் நடந்த போரை முடித்து வைப்பது என்பது எவ்வளவு சிரமமாக இருக்கப்போகின்றது என்பதையே இது காட்டுகிறது எனவும் பிரான்சிஸ் ஹரிசன் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.